**D.V.C. 16 of 2022** **Previous Date : 12.01.2024**

**RW1**

**பிரகாஷ் த/பெ.சிவசாமி**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of the Day of 22.06.2026.**

**<u>மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

**1.** **நான் என்ன படித்துள்ளேன் என்றால் B.Com படித்துள்ளேன். இந்த மனுதாரர் எனக்கு 2வது திருமணம் என்றால் சரிதான், மனுதாரருக்கும் இது 2வது திருமணம். எனக்கு முதல் திருமணம் எப்போது நடந்தது என்றால் 2009ல் நடந்தது. எனது முதல் மனைவி பெயர் என்ன என்றால் வினோதினி. எனக்கு முதல் திருமணத்தில் குழந்தைகள் இருக்கிறது என்றால் ஒரு பெண் குழந்தை உள்ளது. அந்த பெண் குழந்தை எங்களுடன் இருக்கிறதா என்றால் இல்லை. எப்போது எனக்கு முதல் திருமணத்தில் விவாகரத்து நடந்தது என்றால் தேதி சரியாக தெரியவில்லை, ஆனால் விவாகரத்து முடிந்த பின்பு தான் இந்த திருமணம் செய்தேன். எனக்கு முதல் திருமணம் விவாகரத்து Exparte உத்தரவு என்றால் சரிதான். அந்த Exparte உத்தரவை ரத்து செய்ய வேண்டும் என்று என்னுடைய முதல் மனைவி தாக்கல் செய்திருந்த மனுவை மறைத்து நான் இந்த திருமணம் செய்து கொண்டேன் என்றால் சரியல்ல. இந்த மனுதாரரை எப்படி அறிமுகமாகி திருமணம் செய்து கொண்டேன் என்றால் எனது நண்பர் மூலமாக பழக்கம், அந்த நண்பர் மூலம் திருமணம் நடந்தது, அந்த நண்பர் தற்போது உயிருடன் இல்லை. முதல் திருமணத்தின் விவாகரத்தின்போது அந்த குழந்தைக்கு எவ்வளவு ஜீவனாம்சம் கொடுத்தேன் என்றால் ஜீவனாம்சம் கொடுக்கவில்லை, எனது முதல் மனைவி ஜீவனாம்சம் வேண்டாம் என்று சொல்லிவிட்டார். எனது முதல் மனைவி ஜீவனாம்சம் வேண்டாம் என்று சொல்லிவிட்டார் என்ற உத்தரவு ஆவணத்தை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் வருமான வரி பிரச்சனை வரும் என்று நீதிமன்றத்திற்கு தெரிவிக்காமல் நீதிமன்றத்திற்கு வெளியே பேசி அந்த குழந்தைக்கு ரூபாய் 1 கோடி ஜீவனாம்சம் கொடுத்தேன் என்றால் சரியல்ல. மனுதாரர் ஈரோடு கொங்கு Matrimonyல் திருமண மையத்தில் பதிவு செய்து வைத்திருந்ததை பார்த்து அதன் மூலம் பேசி, கேட்டு திருமணம் செய்தேன் என்றால் ஆமாம். அந்த முதல் மனைவிக்கு எவ்வளவு வரதட்சனை நகை கொடுத்தார்கள் என்றால் எதுவும் இல்லை.**

முதல் திருமணத்தில் என்ன காரணத்திற்காக விவாகரத்து செய்தேன் என்றால் அவர் இங்கு இருக்கவில்லை. நான் வரதட்சனை கொடுமை, உடல் ரீதியாக துன்பம் செய்ததால் அவர் தானாக கொடுக்கும் அளவில் வந்து கொடுத்துவிட்டார் என்றால் சரியல்ல. மனுதாரர் வீட்டில் என்ன சீர்வரிசை செய்தார்கள் என்றால் ஒன்றும் செய்யவில்லை. மனுதாரர் சீர்வரிசை செய்யவில்லை என்றும், நான் தான் மனுதாரரை விரும்பி திருமணம் செய்து அழைத்து வந்தேன் என்றும் என்னுடைய முதல் விசாரணை வாக்குமூலத்திலும், பதிலுரையிலும் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. மனுதாரர் சீர்வரிசை செய்யவில்லை என்று முதல் விசாரணையில் என்ன காரணத்திற்காக சொல்லவில்லை என்றால் அதை நான் பெருசாக கேட்கவில்லை, விரும்பவில்லை. மனுதாரர் வீட்டில் 100 பவுன் நகையும், 20 லட்சம் மதிப்பில் காரும் வரதட்சனையாக கொடுத்தார்கள் என்றால் சரியல்ல. எனக்கும், மனுதாரருக்கும் எப்போது திருமணம் நடந்தது என்றால் பொள்ளாச்சியில் பதிவு அலுவலகத்தில் திருமணம் நடந்தது, அதற்கு பிறகு கோவிலில் திருமணம் நடந்தது, தேதி ஞாபகமில்லை. மனுதாரர் வீட்டில் இருந்து தான் பரமத்திவேலூரில் வெங்காளியம்மன் கோவிலில் வைத்து திருமணத்திற்கான செலவுகளை செய்தார்கள் என்றால் தெரியவில்லை, ஞாபகமில்லை. நாங்கள் எத்தனை பேர் சென்றோம் என்றால் நான், எனது அப்பா, அம்மா, எனது நண்பர், எனது அத்தை கலந்து கொண்டோம். நான் பழனியில் MRF டையர் நிறுவன டீலர் இரண்டு கடைகள் வைத்துள்ளேன் என்றாலும் போக்குவரத்து நிறுவன உரிமையாளர் என்றாலும் சரிதான். இவ்வளவு வசதி உள்ள நாங்கள் என்ன காரணத்திற்காக 5 பேர் மட்டும் திருமணத்திற்கு சென்றோம் என்றால் தெரியவில்லை. எனக்கு அப்போது சட்டப்படியாக முதல் திருமணத்தில் விவாகரத்து நடைபெறவில்லை என்பதால் நான் எனது உறவினர்களை அழைத்து செல்லவில்லை என்றால் சரியல்ல. என்னுடைய நடவடிக்கைகள் இவ்வாறு இருந்த காரணத்தினால் தான் பெண் பார்ப்பது முதல் திருமணம் முடியும் வரை உறவினர்கள் மற்றும் மற்ற நபர்கள் யாரையும் அழைத்து செல்லவில்லை என்றால் சரியல்ல. திருமணத்திற்கு எத்தனை பேர் வந்தார்கள் என்றால் தெரியவில்லை. மனுதாரருக்கும், எனக்கும் நடந்த திருமணத்திற்கு 600 – 700 பேர் வந்தார்கள் என்றாலும் அந்த திருமணத்திற்கு ரூபாய் 20 லட்சம் மனுதாரர் வீட்டில் இருந்து செலவு செய்தார்கள் என்றாலும் சரியல்ல. நகையும், காரும் வாங்கவில்லை என்று நிரூபண

வாக்குமூலத்தில் பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல.

2. திருமணம் முடிந்து நாங்கள் எங்கு இருந்தோம் என்றால் தனியாக ஒரு வாடகை வீட்டில் இருந்தோம். எவ்வளவு நாள் இருந்தோம் என்றால் மனுதாரர் கர்ப்பமாகும் வரை இருந்தோம், அதற்கு பிறகு மனுதாரர் அவரது வீட்டிற்கு சென்றார். எந்த மாதம் முதல் எந்த மாதம் வரை அவ்வாறு வாடகை வீட்டில் இருந்தோம் என்று தெரியுமா என்றால் குழந்தை பிறந்த பின்பு எத்தனை மாதம் எனது வீட்டில் மனுதாரர் இருந்தார் என்றால் மூன்று மாதங்கள் இருந்திருப்பார். நான் எனது முதல் விசாரணையில் மனுதாரர் இந்து கணவனுக்கு மனைவி என்ற முறையில் செய்ய வேண்டிய கடமைகளை செய்யாமல் விட்டுவிட்டார் என்று சொல்லியுள்ளது எது என்றால் மனுதாரர் சொல்லாமல் சென்றுவிட்டார். சொல்லாமல் சென்றுவிட்டார் என்று சொல்லியுள்ளதில் மனுதாரரை அழைத்து வர முயற்சி செய்தேனா என்றால் நான் அழைத்தேன் மனுதாரர் வரவில்லை. எந்த தேதியில் எந்த மாதத்தில் மனுதாரரை அழைத்தேன் என்றால் 10 வருடமாகிவிட்டதால் தேதி, மாதம் தெரியவில்லை. யார் சென்று மனுதாரரை அழைத்தார்கள் என்றால் எனது தங்கை கணவரும், எனது அம்மாவும், எனது அப்பாவும் சென்று அழைத்தார்கள். நான் எனது முதல் விசாரணை வாக்குமூலத்திலும், எதிருரையிலும் எனது தங்கை கணவரும், எனது அம்மாவும், எனது அப்பாவும் சென்று அழைத்தார்கள் என்று சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. நான் தான் கொடுமைப்படுத்தி துரத்திவிட்டேன் என்றாலும் அதனால் மனுதாரரை அழைப்பதற்கு எந்த முயற்சியும் செய்யவில்லை என்றாலும் சரியல்ல. நான் மனுதாரருடன் சேர்ந்து வாழ வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேன் என்று முதல் விசாரணை வாக்குமூலத்தில் சொல்லியுள்ளது எந்த தேதியில் அனுப்பினேன் என்றால் தேதி தெரியவில்லை. நான் வழக்கறிஞர் மூலம் மனுதாரருடன் சேர்ந்து வாழ அறிவிப்பு அனுப்பவில்லை என்பதால் அந்த அறிவிப்பை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மனுதாரருக்கு குழந்தை எங்கு வைத்து பிறந்தது என்றால் கோயம்புத்தூரில் வைத்து பிப்ரவரி 6ம் தேதி பிறந்தார், வருடம் தெரியவில்லை. அவ்வாறு குழந்தை பிறந்தவுடன் அது பெண் குழந்தை என்பதால் மூன்று நாட்களில் மனுதாரரையும், குழந்தையையும் அங்கே விட்டுவிட்டு நான் வந்துள்ளேன் என்றால் சரியல்ல. குழந்தை பிறந்தபோது எனது அம்மாவோ, அப்பாவோ அது பெண் குழந்தை என்பதால் உடன் இருக்கவில்லை என்றால்

சரியல்ல. எனது அப்பா, அம்மா தூண்டுதலின்பேரில் மனுதாரரை மனதளவில் துன்புறுத்தினேன் என்றால் இல்லை.

3. நான் எப்போது போய் குழந்தையை பார்த்தேன் என்றால் மூன்று வருடத்திற்கு முன்பு ஒரு தீபாவளி நேரத்தில் போய் பார்த்தேன், பிறந்தநாளுக்கும் போய் பார்த்தேன், கடந்த மூன்று வருடங்களாக போகவில்லை. தற்போது குழந்தைக்கு வயது என்ன ஆகிறது என்றால் 9வயது இருக்கும். எனது முதல் விசாரணை வாக்குமூலத்தில் குழந்தையை பார்க்கவில்லை என்று சொல்லியுள்ளேன் என்றால் இல்லை, குழந்தையை பார்க்கபோனபோது குழந்தை என்னை பிடித்து அழுதது. குழந்தையை பள்ளிக்கூடத்தில் சேர்ப்பதற்கு மற்றும் அடிப்படை தேவைக்கு நான் என்ன செய்தேன் என்றால் குழந்தைக்கு பள்ளிக்கட்டணத்திற்கு Gpay மூலம் பணம் அனுப்பியுள்ளேன். யாருக்கு அந்த பணத்தை அனுப்பியுள்ளேன் என்றால் மனுதாரரின் அக்கா ஆர்த்திக்கு அனுப்பினேன். எவ்வளவு பணம் அனுப்பினேன் என்றால் தொகை சரியாக ஞாபகமில்லை. பணம் அனுப்பியதாக ஆவணத்தை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றாலும் நிரூபண வாக்குமூலத்தில் பணம் அனுப்பியதாக சொல்லவில்லை என்றாலும் சரிதான். எனக்கு ஒரு மாதத்திற்கு எவ்வளவு வருமானம் வருகிறது என்றால் ஒரு வருடத்திற்கு ரூபாய் 10 லட்சம் வருகிறது. எனக்கு மனுதாரருடன் திருமணம் முடிக்கும்போது மாதம் ஒன்றரை லட்சம் வருமானம் வருகிறது என்று சொல்லி அதனால் தான் 100 பவுன் நகையும், 20 லட்சம் காரும் வாங்கி கொடுத்தார்கள் என்றாலும் சரியல்ல. மனுதாரர் என்னுடன் சேர்ந்து வாழ முயற்சி செய்தார் என்றால் சரியல்ல. குழந்தையுடன் மனுதாரர் எனது வீட்டில் இருந்தபோது நான் மது பழக்கத்தில் அடிமையாகி மனுதாரரை பாலியல் ரீதியாக கொடுமை செய்து படுக்கையிலேயே சிறுநீர் கழித்து பயங்கர கொடுமை செய்து வந்தேன் என்றாலும் மனுதாரரின் தாயார் கிறிஸ்டியன் மதத்திற்கு மாறிவிட்டார் என்று சொல்லி கொடுமை செய்து வந்தேன் என்றாலும் சரியல்ல. மனுதாரரின் தகப்பனார் பஸ் டிரைவர் தான் என்று சொல்லி மனதளவில் கொடுமைப்படுத்தினேன் என்றால் சரியல்ல. மனுதாரரின் தகப்பனார் இறந்துவிட்டதால் மனுதாரரின் தாயார் டீச்சராக இருப்பதால் மேலும் வரதட்சனை வேண்டும் என்று மனுதாரரை கொடுமை செய்தேன் என்றால் சரியல்ல. குழந்தை இருப்பதால் எனது வீட்டின் மேல் மாடியில் கழிப்பறை மற்றும் இதர வசதிகள் அனைத்தையும் மனுதாரரின் தாயார் செலவில் செய்து

கொடுத்தார் என்றால் சரியல்ல.

4. நான் செய்யும் தவறுகளை எனது அப்பா, அம்மாவிடம் மனுதாரர் சொன்னாலும் எனது அப்பா, அம்மா மனுதாரரை வெளியேற்ற வேண்டும் என்ற உள்நோக்கத்தில் செயல்பட்டு வந்தார் என்றால் சரியல்ல. மனுதாரரின் அக்கா பற்றி நிரூபண வாக்குமூலத்தில் தேவையில்லாமல் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. மனுதாரரின் அக்கா எங்கு இருக்கிறார் என்றால் மனுதாரரின் அம்மா வீட்டில் இருக்கிறார். மனுதாரரின் அக்கா அவரது அம்மா வீட்டில் இல்லாமல் தனியாக இருந்து வருகிறார் என்றாலும் மனுதாரரின் குடும்பத்தை பற்றி தவறாக சித்தரிக்கும் வகையில் ஜோடனை செய்து சொல்லியுள்ளேன் என்றாலும் சரியல்ல. குழந்தைக்கு காதணிவிழா எங்கு நடந்தது என்றால் திருஆவினன்குடியில் நடந்தது. எத்தனை பேர் கலந்து கொண்டோம் என்றால் நானும், எனது தங்கை குடும்பத்தாரும் கலந்து கொண்டோம். மனுதாரர் வீட்டில் இருந்து குழந்தைக்கு வைர கம்மல் காதணிவிழாவில் அணிவித்தார்கள் என்றால் இல்லை, நான் தான் தங்க தோடு வாங்கி கொடுத்தேன். நான் குழந்தைக்கு செயின், தங்கதோடு வாங்கி கொடுத்தேன் என்று நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. மனுதாரர் எப்போதும் சேர்ந்து வாழ வேண்டும் என்றும், குழந்தைக்கு நல்ல எதிர்காலம் வேண்டும் என்றும், கஷ்டத்தை அனுபவித்து வந்தார் என்றாலும் நான் நண்பர்களுடன் சேர்ந்து 2 – 3 நாள் வீட்டிற்கு வராமல் இருந்துவிடுவேன் என்றாலும் சரியல்ல. மனுதாரர் கேட்டதை வாங்கி கொடுத்தேன் என்று சொல்லியுள்ளதில் என்ன வாங்கி கொடுத்தேன் என்றால் தற்போது ஞாபகமில்லை. மனுதாரர் எனது வீட்டில் குழந்தையுடன் இருந்த சமயத்தில் நான் மற்றும் எனது பெற்றோர் அருகில் வசிப்பவர்களிடம் மனுதாரரை வீட்டு வேலைக்காரி என்று சொல்லி கொடுமை செய்தேன் என்றால் சரியல்ல. நான் செய்த கொடுமைகளை எல்லாம் தாங்காமல் மனுதாரர் அவரது அம்மா வீட்டிற்கு சென்றுவிட்டார் என்றால் சரியல்ல. மனுதாரர் பொய் சொல்லி கேவலப்படுத்தினார் என்று சொல்லியுள்ளதில் என்ன கேவலப்படுத்தினார் என்றால் எல்லாம் பொய் Case. மனுதாரர் சிங்கப்பூரில் வேலை செய்கிறார் என்று சொல்லியுள்ளதில் என்ன ஆவணம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் தாக்கல் செய்யவில்லை. குழந்தையை மனுதாரர் தான் பராமரித்து வரும் நிலையில் நான் தான் குழந்தைக்கு Passport கொடுக்கவிடாமல் தடுத்துவருகிறேன் என்றால் நான் வளர்த்து கொள்வேன் என்பதால் அவ்வாறு

தடுத்தேன். குழந்தையை வளர்க்கிறேன் என்று மனு போட்டேனா என்றால் ஆமாம், போட்டுள்ளேன்.

5. அவ்வாறு குழந்தை வளர்க்கிறேன் என்று கேட்ட மனுவை தாக்கல் செய்துள்ளேனா என்றால் தெரியவில்லை. என்னுடைய போன் எண்.9894361191 என்றால் சரிதான். எனது செல்போனில் இருந்து மற்ற பெண்களுடன் தொடர்பு செய்து Chat செய்து உள்ளதை காட்டி நான் மனுதாரரை கொடுமை செய்தேன் என்றால் சரியல்ல. மனுதாரரின் பொருட்கள் அனைத்தும் எனது வீட்டில் தான் இருக்கிறது என்றால் கட்டில், பீரோ, மெத்தை இருக்கிறது. மனுதாரரின் Air Conditioner, குளிர்சாதனப்பெட்டி, சலவை இயந்திரம், Micro owen, TV, பீரோ, Showcase, Dressing Table, Tining Table, Executive மேசை, வெள்ளி தட்டு, வெள்ளி பாத்திரம், வெள்ளி கிண்ணம் மற்றும் இதர வெள்ளி பொருட்கள் மற்றும் சில்வர் பண்ட பாத்திரங்கள் எனது வீட்டில் இருக்கிறது என்றால் சரியல்ல. மனுதாரரின் பொருள் என்ன இருக்கிறது என்றால் கட்டில், பீரோ, Fridge இருக்கிறது. நான் திண்டுக்கல் மெயின்ரோடு பழனியில் MRF டயர் கடை வைத்துள்ளேன் என்றால் எனது அப்பா நடத்தியுள்ளார். நான் அந்த திண்டுக்கல் மெயின்ரோடு பழனியில் MRF டயர் கடையில் எதுவும் இல்லையா என்றால் நான் பைபாஸ் ரோட்டில் ஸ்ரீவாரி டயர்ஸ் கடை வைத்துள்ளேன். எனக்கு போக்குவரத்து நிறுவனம் இருக்கிறது என்றால் எனது தாயார் பெயரில் இருக்கிறது. என்னுடன் பிறந்த ஒரு பெண் குழந்தையையும் திருமணம் செய்து கொடுத்துவிட்டார்கள் என்றால் சரிதான். எனது தங்கைக்கு சேர வேண்டியது எல்லாம் கொடுத்துவிட்டார்கள் என்பதால் நான் ஒரே மகன் என்பதால் எனக்கும், என் பெற்றோருக்கும் சேர்த்து மாதம் ரூபாய் 3 லட்சம் வருமானம் வருகிறது என்றால் சரியல்ல. மனுதாரருடன் திருமணம் முடிந்த பின்பு நான் முதல் மனைவியுடன் பேசுவேன் என்றும், மற்ற பெண்களுடன் பேசுவேன் என்றும் கொடுமை செய்தேன் என்றால் இல்லை. நான் முதல் திருமணத்தில் விவாகரத்து செய்யாமல் மனுதாரரை திருமணம் செய்து மோசடி செய்தேன் என்றால் சரியல்ல. பெண் குழந்தை பிறந்ததால் அடுத்தவனுக்காக சம்பாத்தியம் செய்ய வேண்டும் என்று குழந்தையையும், மனுதாரரையும் கொடுமை செய்தேன் என்றால் சரியல்ல. எனது கார் கவிழ்ந்ததா என்றால் ஆமாம், எனது நண்பர் எடுத்து சென்று கவிழ்ந்தது. எனது நண்பர் எடுத்து செல்லவில்லை என்றாலும் நான் தான் மது போதையில் சென்று கவிழ்ந்து எனக்கு எலும்பு முறிவு ஏற்படவில்லை

என்றாலும் சரியல்ல. எனக்கு கொடைக்கானல் ரோட்டில் தோட்டம், மொல்லம் பட்டி தோட்டம், Finance, போக்குவரத்து நிறுவனம், Bank இருப்பு இருப்பதால் குழந்தைக்கும், மனுதாரருக்கும் சேர்த்து மாதம் ரூபாய் 1 லட்சம் கொடுக்கும் தகுதி உடைய நபர் என்றால் சரியல்ல. மனுதாரரின் வாழ்க்கையை சீரழித்து கொடுமை செய்துள்ளதால் மன ரீதியாக சித்ரவதை மற்றும் மனுதாரரின் அம்மாவை மதம் மாறியதை பற்றி பேசி சித்ரவதை மற்றும் பெண் குழந்தை என்று சொல்லி மனஉளைச்சல் ஏற்படுத்தியது மற்றும் பல்வேறு மனஉளைச்சல் ஏற்படுத்தியற்காக மனுதாரருக்கு ரூபாய் 50 லட்சம் நஷ்டஈடு கொடுக்க நான் கடமைப்பட்டவர், தகுதியுடையவர் என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்காக நான் என்னுடைய சொத்து ஆவணங்களை மாற்றி வைத்துள்ளேன் என்றால் சரியல்ல. மனுவில் கோரியுள்ள பரிகாரங்களை நான் கொடுக்க கடமைப்பட்டவர் என்றால் சரியல்ல.

M PONPANDI
Digitally signed by M PONPANDI
Date: 2026.06.22 17:57:12 +0530

நீதித்துறை நடுவர்,
பழனி.